புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 34. TML1173 - புறநானூற்றில் பெண்கள்

முனைவர் சி.ஜெயலட்சுமி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீவாசவி கல்லூரி (சுயநிதிப்பிரிவு), ஈரோடு.

## முன்னுரை

உலகின் உயிரோட்டம் உயிரினங்களில் ஆண் பெண் எனும் இருமையால் இயங்குகின்றது. நாகரீகமற்று வாழ்ந்த ஆதி காலத்தில் ஆடவரும் பெண்டிரும் சரிசமமாக செயல்களில் ஈடுபட்டு தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். பின்னர் குடும்பம், சுற்றம் என்ற உறவு முறை தோன்றி பின்னர் பணி பாகுபாட்டினால் ஆண், பெண் என்ற வேறுபாடு தோன்றியது. இதன் மூலம் ஆணுக்குப் பின் கட்டுப்பட்டவள் என்ற நிலை தோன்றியது. இன்றைய நிலையில் பெண்களும் ஆணுக்கு நிகராக கல்வி, பொருளாதாரம், பண்பாடு, குடும்பம் போன்ற பல்வேறு நிலைகளில் தங்களை முன்னிறுத்துகின்றனர்.

தமிழ் இலக்கியத்தின் தொன்மையான நூலான தொல்காப்பியம் ஆண்களின் நிலையை,

“பெருமையும் உரனும் ஆடுஉ மேன” (தொல் நூற். 95)

என்று ஆணின் பெருமையையும், வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும்

“அச்சமும் நாணும் மடனும்
முந்துறதல் நிச்சமும் பெண்பாற்குரிய” (தொல் நூற். 96)

என்று பெண்களுக்குரிய பண்புகளைத் தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது.

“அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கை” (அகம் 225–1:4)

உடையவளாயிருத்தல் பெண்களின் இயல்பாகக் கூறப்படுகிறது. புறநானூற்றில் பெண்ணின் மென்மை அவளுக்கு ஆடவரின் மதிப்பைப் பெற்று தரும் என்பதனை,

“மென்மையின் மகளிர்வணங்கி, வன்மையின்
ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை” (புறம் 68:6)

இதன் மூலம் அன்பு,மடம், மென்மை, இனிமை, நாணம், அச்சம், அழகு, கற்பு ஆகியவை பெண்களுக்கு உரிய பண்புகளாகப் பழந்தமிழர் கொண்டதை உணர முடிகிறது.

“பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை அகற்றிடும் காணீர்”

என்ற பாரதியார் வரிகளுக்கு ஏற்றாற் போல் பெண்கள் அறிவு பெற்றவர்களாக இருப்பதை புறநானூற்றில் பாடல்களைப் பாடிய பெண் கவிகளின் வாயிலாக அறிய முடிகிறது. பெண்கள் இலக்கிய படைப்பாளிகளாக கல்வியிலும் சிறந்து விளங்கினார்கள். சங்ககாலத்தில் அவ்வையார், காக்கைப் பாடினியார், ஆதிமந்தி, வெள்ளிவீதியார், நக்கண்ணையார், பாரி மகளிர், பொன்முடியார், முள்ளியூர் பூதியார், பொத்தியார், கூகைக் கோழியார் போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இலக்கிய தொண்டாற்றியுள்ளனர். இறவாப் புகழ்பெற்ற பொன்முடியார் பாடிய பாடலான,

“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனை
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிரு வாளருஞ் சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே” (புறம் –312)

என்ற பாடலைப் படிக்கும் பொழுதே நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது. மேலும்

''பெண்களுக்கு கல்வி வேண்டும்; குடித்தனம் பேணுதற்கு
பெண்களுக்கு கல்வி வேண்டும்; கல்வியைப் பேணுவதற்கு
பெண்களுக்கு கல்வி வேண்டும்; உலகினை பேணுதற்கு''

*என்று மகளிர் கல்வி அறிவுவைத் திறவுகோலாகக் கொண்டு விழிப்புணர்வு எல்லா நிலைகளிலும் ஏற்படுத்தப்பட்டு வந்திருப்பதை உணர முடிகிறது.*

*இல்லறம் என்பது வீட்டில் இருந்து வாழும் அறநெறி. 'இல்லற மற்றது நல்லறமன்று' இல்லற வாழ்வு மக்களை மாக்கள் என்னும் நிலையிலிருந்து வேறுபடுத்தி உயர்த்துவது. திருமணம் என்னும் பந்தத்தில் இணையும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு தங்கள் வாழ்வை மேற்கொள்ள முற்படுகின்றனர். பெண் திருமணத்திற்குப் பிறகு மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிரே என்பதற்கு இணங்க தன்னை பேணுவதை விடுத்து தம் கணவனை தன் உயிராக கருதி பேணுவதில் ஈடுபடுகிறாள். கணவனுக்கு துன்பம் ஏற்படும் போது உறுதுணையாக இருந்து பணிவிடை மேற்கொள்கிறாள். இல்லறத்தை தூய்மைப்படுத்தி (108:1–3) நலங்காக்கும் மகளிர் தம் துணைவர் போரிலும், வேட்டையாடலிலும், போரில் பெற்ற புண்களுக்கு மருந்திட்டு மருத்துவராக செயல்படுவதுடன் அவர்களின் துன்பத்தை போக்கும் வகையில் இனிய குரலில் பாடுதல், போரில் புண்பட்ட கணவனை பேய் நெருங்காதபடி வேம்பினை மனையில் ஆம்பல் பண்ணைப்பாடி அகிறுப் புகைக் காட்டி அவர்களைக் காத்துள்ளனர் என்பதை,*

''தீங்கனி இரவமொடு வேட்புமனுத்செரீஇ
வாங்கு மருப்பி யாழொடு பல்லியங் கறங்க
கைபெயப் பெயர்த்து மையிழுது இழுகி
ஐயவி சித்தி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக் களக்க'' (புறம் –281)

*என்ற பாடல் புலப்படுகிறது. அதுமட்டுமல்ல இல்லற வாழ்க்கையில் குழந்தைப்பேறு என்பது இன்றியமை யாதது. சங்ககாலம் முதல் இக்காலம் வரை குழந்தைப்பேறு இன்மைக்கு பெண்களையே பழித்து கூறுகிறது.*

''படைப்புப்பல படைத்து பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ்செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தலும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழு நாளே'' (புறம் –188)

*அன்று முதல் இன்று வரை மக்கள் வேண்டாம் என்று உரைத்தவர் இல்லை. மாறாக மக்களை பெறுக பெறுக என்று வாழ்த்துகின்றனர். அதற்குரிய வழிமுறைகளையும் காட்டினர். எனவே மக்களைப் பெற்று மனையறம் காத்து சுற்றம் தழுவிச் சோர்விலாது நன்மை செய்து வாழ்ந்த மகளிரை புறநானூற்றில் காண முடிகிறது.*

*திருமணத்திற்கு முன்பிருந்தே பூச்சூடி வளையல்கள் அணிந்து நல்ல உணவுகளை உண்ட மகளிர் கணவனை இழந்த பிறகு அனைத்தையும் துறந்தவராகின்றனர். பஞ்சணை, நல்ல படுக்கையில் படுத்து உறங்கிய மகளிர், பாயும் இல்லாது, சிறிய கற்கள் நிறைந்த வெறும் தரையில் படுத்து உறங்குகின்றனர். தாளிப்புடன் கூடிய நல்ல கொழுவிய சுவையுடன் அடிசிலைத் தவிர்த்து நறுநெய்யின்றி நீர்ச் சோற்றையும், புளி கூட்டப்பட்ட வேளைக் கீரையினையும் உணவாக உட்கொண்டனர். இன்னும் சிலர் அவ்விடத்து உண்டான புல்லரிசியினையே தம் உணவாகக் கொண்டனர் என்பதனை,*

'' ––––––––––––––– நறுநெய் தீண்டாது
அடை யிடைக் கிடந்த கைப்பிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப் பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்றுவதியும்'' (புறம் –246)

*என்ற அடிகள் விளக்குகின்றன. பெண்ணின் இளமைக்கும், கைம்மைக்கும் முறையே தழையினையும், புன்மையான அரிசியினையும் தந்து உதவும் வெள்ளை அல்லிக் கொடியின் பண்பினை,*

''மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதாமுடித்த வம்பகைத் தெரியாத
சிறுவெள் ளாம்பல் அல்லியுண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்தல் அதனினும் அரிதே'' ( புறம் – 280)

*என்ற பாடலும், நீர் சோறு, புல்லரிசிச் சோற்றை யாதாயினும் அதனைக் கணவனை இழந்த மகளிர்*

*முறையான நேரத்தில் உண்டார்களா எனில் இல்லை எனலாம். நேரம் தவறி உண்ணும் நிலை கணவனை இழந்த பிறகு உருவாக்கப்பட்டிருக்கிறது.*

''பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னாவைக லுண்ணும்
அல்லிப் படாஉம் புல்லா யினவே'' (புறம் –248)

*என்று ஒக்கூர் மாசாத்தனார் கணவனை இழந்த பெண் ஒருத்தியின் நிலையினை எடுத்துக்காட்டுகிறார். அதுமட்டுமல்லாது, திருமண அடையாளச் சின்னமான இழைகளைகின்றனர் (புறம் – 224) அத்துடன் கூந்தல் களைவதை (புறம் – 261) இறந்துட்ட கணவன் இவளுக்கு தெய்வமாகிறான் (புறம் – 234) என்பதையும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தையும் பாடல் வழி அறிய முடிகிறது.*

*சங்ககாலப் பெண்கள் சாதுரியம் பெற்றவர்களாக விளங்கினர் என்பதை புறநானூற்று பாடல்கள் விளக்குகின்றன. அதியமானுக்கும், தொண்டைமானுக்கும் நிகழவிருந்த போரைத் தடுப்பதற்காகத் தொண்டைமானிடம் தூதுவந்த அவ்வை அவரின் படைக் கருவிகளைப் பார்த்து இவை புத்தம் புதிதாகப் போற்றி பாதுகாத்து வைத்துள்ளீர். ஆனால் அதியனின் படைக் கருவிகள் நுனி மழுங்கியும், முறிந்தும் கிடக்கின்றன என்று சாதுர்யமாக அதியனின் பேராற்றலை இகழ்வது போல புகழ்வதை,*

''கடியுடை வியன்நகர்வே அவ்வை
பகைவர்க் குத்திக்கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றி மாதமோ'' (புறம் – 95) *என்ற பாடல் விளக்குகிறது.*

*வீரத்தை வெளிப்படுத்துவதில் ஆண்களுக்கு நிகர் பெண்களும் வாழ்ந்ததை புறநானூறு பகிர்கிறது. தன் மகன் போர்க்களம் சென்று யானையை கொன்று தானும் இறந்தான் என்று சான்றோன் உரைக்கக் கேட்ட மரத்தாய் ஒருத்தி மகிழ்கிறார். அம் மகிழ்வு அவனைப் பெற்ற போது அடைந்ததை விட பெரிது என்பதை,*

''மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டணன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே'' (புறம் – 277) *என்ற பாடல் வழி அறிய முடிகிறது.*

*ஒரு வேறுபட்ட மறத்தாய் தன்மகன் புறங்காட்டி ஓடும் போது புறப்புண்பட்டு இறந்தான் என்பதை கேட்ட தாய் துடித்து, இச்செய்தி உண்மையெனில் அவன் பால் குடித்த மார்பை அறுத்தெறிவேன் எனச் சூளுரைத்து போர்க்களம் சென்றாள். மகனைக் கண்டதும் மகிழ்ந்தாள். ஏனெனில் அவன் விழுப்புண் பட்டு இறந்திருந்தான்.*

''நரம்பு எழுந்து உலறிய நிரம்பாமென்தோள்
முளரிமருங்கின் முதியோள் சிறுவன்
படை அழித்து மாறினன் என்று பலர் கூற
மண்டு அமர்க்கு உடைந்தனள் ஆயின் உண்ட என்
முலைஅறுத் திடுவென் யான்எனச் சினைஇந்
கொண்ட வாளொடு படுபிணம் பெயரால்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே'' (புறம் – 278)

*என்ற அடிகளால் அறிய முடிகிறது. இத்தகைய மறக்குடிப் பெண்களும் இத்தமிழ்ச் சமுதாயத்தில் வாழ்ந்திருத்தல் பெருமையை உண்டாக்குவதாகும்.*

*சங்க காலப் பெண்கள் கல்வி அறிவு பெற்றிருக்கும் தற்கால பெண்களுக்கு இணையாக வாழ்ந்துள்ளனர். பெண்கள் வீரமும், நாட்டுப்பற்றும் உடையவர்களாக இருந்தனர். இன்று ஒவ்வொரு துறையிலும் பெண்கள் செய்யும் சாதனை இவ்வுலகையே வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. உலகின் ஒவ்வொரு அணுவிலும் ஜீவ சக்தியாக உயர்த்தி நிற்கும் பெண்மையின் மகோ உன்னதத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.*

**துணைநூற் பட்டியல்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி.
2. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, அகநானூறு, புலியூர்க்கேசிகன், ஸ்ரீ பாரதி பதிப்பகம், சென்னை.
3. சங்கஇலக்கியம், எட்டுத்தொகை, புறநானூறு, புலியூர்க்கேசிகன், ஸ்ரீபாரதிபதிப்பகம், சென்னை.
4. பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம், சென்னை.